JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No.310/2023 Date: 04-06-2025 P.W. 2 / LW 3

| | |
|---|---|
| பெயர் | Mrs. Selvi |
| தந்தை பெயர், க/பெ | Mr.Sekar |
| முகவரி | Mogappair West, 2nd Block. Chennai |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | Flower Shop |
| மதம் | |
| வயது | 52 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 4th day of June 2025.

எதிரி ஆஜாில் உள்ளார்.

**முதல் விசாரணை** - நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதிலுள்ள விவரங்கள் அனைத்தும் நான் நன்கு அறிவேன். அது **அ.த.சா.ஆ.1** ஆகும். கடந்த 05.10.2022 ஆம் தேதி காலை 08.00 மணியளவில் நான் வீட்டிலிருந்து பூ கொடுப்பதற்காக டிவிஎஸ் கம்பெனிக்கு சென்றேன். அப்பொழுது என்னை ஆஜர் எதிரி புஷ்பா என்னை கூப்பிட்டார். நான் அதை மதிக்காமல் பூவைக் கொடுத்து விட்டு திரும்பி வந்தேன். அப்பொழுது என்னை புஷ்பா என்னை வழிமறித்து, எனது வலது கையை பிடித்து முறித்து விட்டார். சாட்சி தனது கையை காட்டி அவருக்கு ஏற்பட்ட வலியை காட்டினார். நான் இதற்காக ஆந்திராவில் உள்ள புத்தூருக்கு சென்று கட்டு கட்டினேன். செல்வி என்பவர் எனது முடியைப் பிடித்து இழுத்து அடித்தார். கண்ணம்மா என்பவர் என்னை ஏன் மதிக்கமாட்டிங்கிற என்று கூறி கடையை போடக்கூடாது என்றும், எங்களை மிஞ்சி எதையும் செய்யக்கூடாது என்று கூறி மிரட்டினார். புஷ்பா என்பவர் திருவாண்மியூரிலிருந்து ரவுடிகளை கூட்டி வந்து கேஸை வாபஸ் வாங்குறியா இல்லை என்றால் உனக்கு இன்னொரு கையையும் முறிக்கட்டா என்று புஷ்பா என்னை தொடர்ந்து மிரட்டி

வருகிறார். இந்த கேஸில் நீ ஜெயித்தால் உன்னை உயிரோடு விடமாட்டேன் என்று புஷ்பா கூறினார். அந்த நபர் ஆஜர் எதிரி தான். அதனை சாட்சி அடையாளம் காட்டினார். எதிரி செல்வி என்பவரை அடையாளம் காட்டி அவர் தன்னை அடித்து தள்ளி விட்டதாக கூறுகிறார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். எனக்கு கை முறிவு ஏற்பட்டதால் சிகிச்சைக்கு வெளியூர் சென்று சிகிச்சை பெற்று வந்ததால் என்னால் உடனடியாக புகார் கொடுக்க இயலவில்லை. சிகிச்சை முடிந்து வந்து தான் நான் புகார் கொடுத்தேன். அதனால் தான் எனக்கு புகார் கொடுப்பதில் காலதாமதம் ஆனது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை** / இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur